# வானவில்

# VAANAVIL

இதழ் - 86 | ISSUE – 86

மாசி 2018 | FEBRUARY 2018


# தலைவலியைக் குணமாக்க தலையணையை மாற்றிப் பயனில்லை!

**2018** பெப்ருவரி 10இல் இலங்கையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் எமது ‘வானவில்’ ஜனவரி மாத (85ஆவது) இதழ் வெளிவந்திருந்தது.


அந்த இதழில் முன்பக்க தலைப்புச் செய்தியாக, **“ஜனாதிபதி – பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும்”** என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றைப் பிரசுரித்திருந்தோம்.

அதேபோல அந்த இதழின் 6ஆம் 7ஆம் பக்கங்களில் **“வடக்கின் உள்ளூராட்சித் தேர்தல் நிலைமை”** என்ற தலைப்பில் புனிதன் என்பவர் எழுதிய கட்டுரையையும் பிரசுரித்திருந்தோம்.

அத்துடன் இந்த இதழின் 10ஆம் 11ஆம் பக்கங்களில் சயந்தன் என்பவர் எழுதிய **“உள்ளூராட்சி தேர்தலின் பின் நாட்டில் அரசியல் – நிர்வாக ஸ்திரமின்மை உருவாகும் அபாயம்”** என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்றையும் பிரசுரித்திருந்தோம்.

நாம் பிரசுரித்திருந்த மூன்று கட்டுரைகளிலும் கூறப்பட்டிருந்த விடயங்கள் சரியானவை என்பதை உள்ளூராட்சித் தேர்தலின் பின் நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் தெட்டத் தெளிவாக நிரூபித்து வருகின்றன. நமது எதிர்வு கூறல்கள் சரியென்பதையிட்டு நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

நமது முன்பக்கக் கட்டுரையில் குறிப்பிட்டவாறு, முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை இந்தத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பொது




எதிரணியும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் வலியுறுத்தி வருகின்றனர். பெரும்பாலான மக்களின் கருத்தும் அதுதான்.

அதுமட்டுமின்றி, தற்போதைய கூட்டரசாங்கத்தை முறித்துக் கொண்டு ஆட்சியின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் தத்தமது தனிக்கட்சி அரசாங்கத்தை அமைக்கும் முஸ்தீபுகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

வடக்கின் தேர்தல் நிலைமை பற்றி எழுதிய கட்டுரையில் வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி பல தமிழ் தேசியவாதக் கட்சிகளால் பங்கிடப்படும் என்றும், ஆனால் ஈ.பி.டி.பி. கட்சியின் வாக்கு வங்கி மட்டும் சிதைவுறாது என்றும் குறிப்பிட்டிருந்தோம். அது அப்படியே நடந்தேறியுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் மிகப்பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் ஈ.பி.டி.பி. தனது வாக்கு வங்கியின் பலத்தை அதிகரித்துள்ளது.

அடுத்த கட்டுரையில் உள்ளூராட்சித் தேர்தலின் பின் நாட்டில் அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரமின்மை உருவாகும் எனச் சுட்டிக்காட்டி இருந்தோம். அதுவும் அவ்வாறே நடந்துள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் ஐ.தே.க., சிறீ.ல.சு.க., சிறீ.ல.பொ.பெரமுன என மும்முனைப் போட்டி நிலவியதால், பல சபைகளில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. வடக்கு கிழக்கிலும் இதே நிலைமைதான். ஏதோ ஒரு வகையில் இந்தச் சபைகளில் ஏதாவது ஒரு கட்சி ஆட்சி அமைத்த பின்னர்தான் அதைக் கொண்டு நடாத்துவதில் பல சிக்கல்களும்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# தேர்தலில் தோற்கையில் பிரிவினைவாதம் பெருக்கெடுக்கும்

**அ**ண்மையில் (பெப்ரவரி மாதம் 10ந் திகதி) இலங்கையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத பெரிய அரசியல் மாற்றம் நிகழுமென எதிர்பார்க்கப்பட்டது. அதாவது ஆளுங்கட்சிகளின் பலத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே தேர்தல் முறை ஜனநாயகங்கொண்ட நாடுகளில் இந்த மாதிரியான தேர்தல்கள் (midterm elections) நடாத்தப்படுகின்றன. ஆளுங்கட்சிகள் பொதுவாக மோசமாகத் தோற்பதில்லை. ஆனால் இலங்கையிலோ ஆளுங்கட்சிகள் படுமோசமாகத் தோல்வியைத் தழுவியுள்ளன. உத்தியோபூர்வமான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு மாகாணத்தில் தனது 'ஏகப்பிரதிநிதித்துவத்தை' இழந்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தற்போதைய தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் பாரிய தோல்வியைத் தழுவியுள்ள போதிலும், தாங்கள் தொடர்ந்தும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு ஆட்சி செய்யப்போவதாக அறிவித்துள்ளார்கள். அடுத்த ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் 2020 ஆம் ஆண்டிலேயே நடாத்த வேண்டியிருப்பதால், ஆளுங்கட்சிகள் தொடர்ந்து ஆட்சி செய்வதில் தவறேதும் கிடையாதெனத் தோற்றமளிக்கலாம். ஆனால் மூன்று வருட காலமாக ஆட்சி செய்யும் தற்போதைய அரசின் கொள்கைகளை பெருவாரியான மக்கள் ஜனநாயக ரீதியாக நிராகரித்த பின்னர், இன்னும் இரண்டு வருடங்கள் ஆட்சி செய்வதென்பது மக்கள் விருப்புக்கு எதிரானதென்று கருதப்படுவதே மிகச்சரியானது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து பெப்ரவரி 19ந் திகதி கூடிய பாராளுமன்றத்தில் த.தே.கூவைச்சார்ந்த எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் 'மொட்டில் தமிழீழம் மலரும்' எனக் கூறியிருக்கிறார். இங்கு 'மொட்டு' என அவர் கருதுவது தாமரை மொட்டினை. உள்ளூராட்சித் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய 'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன'வின் தேர்தல் சின்னமே தாமரை மொட்டு. தாமரை மொட்டினால்தான் தமிழீழம் மலருமெனக் கூறிய சம்பந்தன், அத்தோடு நின்றுவிடாது 'அப்பாவி சிங்கள மக்களிடையே தமிழீழம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி மொட்டு அணியினர் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு வெற்றி பெற்றுள்ளனர்' என்றும் தெரிவித்துள்ளார்.

இங்கே சம்பந்தன் 'தமிழீழத்தால் மொட்டு மலர்ந்தது, மொட்டு மலர்ந்தால் தமிழீழம் மலரும்' என ஓர் 'அருமையான தத்துவத்தை' அவிழ்த்து விட்டுள்ளார். மொட்டு அணியினர் சிங்கள இனவாதத்தை வைத்து வென்றுள்ளனர், ஆகவே தமிழ் இனவாதத்தை எப்போதும் போலவே கையிலெடுப்போமென மறைமுகமாகச் சொல்லியுள்ளார். இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கில் த.தே.கூ. செல்வாக்கு சரிந்து போனது பற்றியே அதிகமாகப் பேசவேண்டியவர், தேவையில்லாமல் தங்களுக்கு சம்பந்தமேயில்லாத தென்னிலங்கை அரசியலில் அதிகம் மூக்கை நுழைத்துள்ளார். அவர் இன்னமும் எதிர்க்கட்சித் தலைவரென்ற பதவியில் தொங்கிக் கொண்டிருப்பதே படு ஜனநாயக விரோத செயல். அல்லது தேசிய அரசாங்கம் என்ற பெயரில் செயற்படும் தற்போதைய இலங்கை அரசு இவர்களுக்குப் போட்டிருக்கும் பிச்சை. 55 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் 'கூட்டு எதிர்க்கட்சிகள்' பாராளுமன்றத்தில் செயற்படுகையில் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட த.தே.கூவின் சம்பந்தர் எப்படி எதிர்க்கட்சித் தலைவராக தொடர்ந்து நீடிக்க முடியும்? உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இந்த அரசாங்கம் நீடித்திருப்பதென்பது எவ்வளவு ஜனநாயக விரோதமோ, அவ்வளவு விரோதமானது இவர் எதிர்க்கட்சித் தலைவராக நீடிப்பதென்பதும்.

இதைவிட நடந்து முடிந்த தேர்தலில் ஸ்ரீல.பொ.பெவிற்கு, அதாவது சம்பந்தரின் பாராளுமன்ற உரையில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு 44.69 வீதமான வாக்குகளே கிடைத்துள்ளன எனவும், மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக 50 வீதத்திற்கு அதிகமானோர் வாக்களித்துள்ளனரென்றும் கூறியுள்ளார். 447 அரசியல் கட்சிகளும் 53 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்ட (57252 வேட்பாளர்கள், 8325 ஆசனங்கள்) இத்தேர்தலில் ஒரு கட்சிக்கு 44.69 வீதமான வாக்குகள் கிடைத்துள்ளது என்பது எவ்வளவு பெரிய சாதனையென்ற சாதாரண விளக்கத்தைப் புரட்டி எடுத்து, எதிராக விழுந்த வாக்குகளை வைத்து மஹிந்த ராஜபக்ஷவிற்குத் தோல்வியே என மலினமான முறையில் சம்பந்தர் அரசியல் செய்ய முனைந்துள்ளார்.

உண்மையில் அப்பாவித் தமிழ் மக்களின் அறியாமையை வைத்து கடந்த 70 ஆண்டுகளாக படு சுத்துமாத்து அரசியல் செய்வது தமிழ் அரசியல்வாதிகளே! சம்பந்தரது வாதத்தின்படி பார்த்தால் தேர்தலில் போட்டியிட்ட எல்லாக் கட்சிகளுக்குமே தோல்விதான். ஏனெனில் எல்லாக் கட்சிகளுக்கும் விழுந்த வாக்குகளின் வீதத்தினைவிட, எதிராக விழுந்த வாக்குகளின் வீதமே மிக அதிகம். உதாரணமாக ஐ.தே.க, ஐ.ம.சு.கூ. மற்றும் ஸ்ரீல.சு.க, த.தே.கூவிற்கு விழுந்த வாக்கு வீதங்கள் முறையே 32.61, 13.38, 3.06 ஆகும். சம்பந்தர் இதனை இப்போது கூறுவதின் இன்னுமொரு நோக்கம், அடுத்து ஜனாதிபதித் தேர்தல் வந்தாலென்ன, பொதுத்தேர்தல் வந்தாலென்ன மஹிந்த ராஜபக்ஷ அணியினரால் 50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளை எடுக்க முடியாது என்பதைச் சூட்சுமமாக அறிவிப்பதற்காகவே.

முதலில், மைத்திரி, ரணில், சம்பந்தர் ஆகியோர் முறையே ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் எதிரக்கட்சித் தலைவராகவும் இருந்து கொண்டு, அந்நிய சக்திகளின் கைப்பொம்மைகளாக ஆட்சியைத் தொடர்ந்தால் மஹிந்த ராஜபக்ஷ அணியின் ஆதரவு இன்னமும் பெருகும் என்பதை சம்பந்தர் மாத்திரமல்ல, எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தது, ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்ற, மாகாணசபை, மாநகரசபை, நகரசபை, பிரேதசபை உறுப்பினர்கள் என்ற பதவிகள் எப்போதும் நிரந்தரமானதல்ல. இப்பதவிகள் தேர்தல் ஜனநாயகத்தில் தங்கியுள்ளன. அதாவது தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது சகஜம். தேர்தலில் வெற்றி கொள்ளும் போது, தாங்கள் தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு ஏற்ப மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். தேர்தலில் தோல்விகள் ஏற்படும்போது அதனை ஏற்றுக்கொண்டு புன்னகையோடு விடைபெற வேண்டும். மேலும் தேர்தல் தோல்விக்கான காரணங்களை தாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கமைய போதியளவு சேவைகளை செய்யவில்லை என்ற அடிப்படை உண்மையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**வானவில்**

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.


# டாக்டர் நோர்மன் பெத்யூன் நினைவாக

உலகிலுள்ள பல்வேறு நாடுகளின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அந்நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களிலும், சமூக விடுதலைக்கான போராட்டங்களிலும் பிற நாட்டவர்கள் பலர் பங்குபற்றிய உதாரணங்களை நிறையக் காணலாம். சுதந்திர வெட்கை காரணமாகவும், மனித நேயம் காரணமாகவும் பிற நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்ட அந்த மாபெரும் மனிதர்களில் சிலர் தாம் பணியாற்றச் சென்ற நாடுகளின் மண்ணிலேயே மரணித்து தம் இன்னுயிரைத் தியாகமும் செய்திருக்கிறார்கள்.

அந்த வகையில் 1949 ஒக்ரோபர் 1ஆம் திகதி வெற்றிவாகை சூடிய சீனாவின் மாபெரும் சோசலிசப் புரட்சிக்கும் பல அந்நிய தேசத்தவர்கள் முக்கியமான பங்களிப்பை வழங்கியிருக்கின்றனர். அப்படியானவர்களில் முக்கியமான ஒருவர் கனடாவைச் சேர்ந்த வைத்தியர் நோர்மன் பெத்யூன் (Dr. Henry Norman Bethune) ஆவார். "நோர்மன் பெத்யூன் நினைவாக" என்ற தலைப்பில் சீன மக்களின் மாபெரும் தலைவர் மாஓ சேதுங் ஒரு கட்டுரையை எழுதும் அளவுக்கு வைத்தியர் பெத்யூன் சீன மக்களின் புரட்சிகர இலட்சியத்தில் பங்கு வகித்திருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

வைத்தியர் நோர்மன் பெத்யூன் 1890 ஆண்டு மார்ச் 4ஆம் திகதி கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள Gravenhurst என்ற இடத்தில் பிறந்தார். தமது 49ஆவது வயதில் 1939 நொவம்பர் 12இல் யுத்தத்தால் சூழப்பட்ட ஒரு சிறிய சீனக் கிராமத்தில் மரணத்தைத் தழுவிக் கொண்டார். ஆனால் தமது இந்தக் குறுகிய வாழ்க்கைக் காலத்தில் மனிதகுல விமோசனத்துக்காக எண்ணற்ற கருமங்களை ஆற்றியுள்ளார்.

பெத்யூனின் பெற்றோர்கள் கனடாவில் குடியேறிய பிரித்தானிய மற்றும் ஸ்கொட்டிஸ் வழிவந்த பரம்பரையினராவர். தந்தையார் ஒரு மதபோதகராக இருந்தார். இவரது பாட்டனார் பெத்யூன் (1822 – 1892)



என்பவரும் ஒரு வைத்தியரே. கனடாவில் அந்தக் காலத்தில் உருவாக்கப்பட்ட Upper Canada School of Medicine என்ற பாடசாலையை உருவாக்கியவர்களில் இவரது பாட்டனாரும் ஒருவராவார். அப்பாடசாலை பின்னர் ரொறன்ரோ பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

## தவம்

நோர்மன் பெத்யூன் தமது 19ஆவது வயதில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்காக இணைந்த போதிலும், 1911இல் தமது கல்வியை ஒரு வருட காலத்துக்கு இடைநிறுத்திவிட்டு, Frontier College உடன் ஒரு தொழிலாளர் தொண்டர் ஆசிரியராக இணைந்து சமூக செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினார். குடிவரவாளர்களான மரம் அறுக்கும் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் போன்றோரின் கூடாரங்களிலேயே தங்கி அவர்களுக்கு ஆங்கிலம் எழுத – வாசிக்கக் கற்றுக் கொடுத்தார்.

பின்னர் 1914இல் முதலாவது உலகப் போர் ஆரம்பமான போது திரும்பவும் தனது வைத்தியக் கல்வியை இடைநிறுத்தி விட்டு, பிரான்சில் செயற்பட்டுக் கொண்டிருந்த Canadian Army's No.2 Field Ambulance சேவையில் இணைந்து காயம்பட்டவர்களைச் சுமக்கும் ஓர் உதவியாளராகப் பணியாற்றினார். அந்தச் சந்தர்ப்பத்தில் குண்டுத் தாக்குதல் ஒன்றில் காமடைந்து மூன்று மாதங்கள் வரை சிகிச்சை பெற்ற பின்னர் கனடா திரும்பி மீண்டும் தனது வைத்தியக் கல்வியைத் தொடர்ந்து 1916இல் தனது வைத்தியக் கலாநிதிப் பட்டத்தைப் (M.D.) பெற்றார்.

யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்த சூழில் 1917இல் அரச கடற்படையான Royal Navy இல் Surgeon – Lieutenant ஆக இணைந்து இங்கிலாந்தில் சிறுவர்களுக்கான வைத்தியசாலை ஒன்றில் பணியாற்றினார். அத்துடன் அங்கு தனது FRCS பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

1923இல் Frances Penny என்பவரைச் சந்தித்து அவரைத் தனது வாழ்க்கைத் துணைவியாகத் திருமணம் செய்து கொண்டார். இருவரும் ஒரு வருட காலம் ஐரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அறிந்து கொண்டனர். பின்னர் அமெரிக்கா திரும்பி அங்குள்ள Detriot நகரில் வாழ்ந்து கொண்டு தனியார் சிகிச்சையுடன் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

1928இல் கனடாவின் மொன்றியல் நகரிலுள்ள Royal Victoria Hospital உடன் இணைந்ததுடன், 1928 – 1936 காலகட்டத்தில் Thoracic Surgery இல் சிறப்புப் பயிற்சி பெற்றதுடன், அதில் புதிய மிக முன்னேறிய சிகிச்சை முறைளை உருவாக்கியதுடன், சத்திரசிகிச்சைக்கான புதிய 12 வகையான உபகரணங்களையும் உருவாக்கினார். அந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தநிலை காரணமாக அல்லல்பட்ட மக்களுக்கு இலவச வைத்திய சேவையை வழங்கியதுடன், மக்கள் நலன் சார்ந்த வைத்தியசேவை உருவாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தன்னுடைய நோக்கத்தை

நடைமுறையில் செயற்படுத்திய சோசலிச சோவியத் யூனியனின் சாதனைகளை நேரில் காண்பதற்காக 1935இல் சோவியத் யூனியனுக்குப் பயணமானார். இந்தப் பயணத்தின் பின்னர் வைத்தியர் நோர்மன் பெத்யூன் ஒரு கம்யூனிஸ்ட்டாக மாறியதுடன், கனடிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்புரிமையையும் பெற்றுக் கொண்டார்.

1936இல் ஸ்பெயின் நாட்டில் பாசிசத்திற்கு எதிரான போராட்டம் வெடித்துக் கிளம்பியபோது, அந்நாட்டின் குடியரசுப் போராளிகளுக்கு (The Republican Forces) உதவுவதற்காக "Committee to Aid Spanish Democracy" என்ற அமைப்பினால் அங்கு அனுப்பப்பட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் முன்னரங்க நிலைகளில் நின்று போராடும் சுதந்திரப் போராளிகளுக்கு மக்களிடமிருந்து பெறப்படும் இரத்தத்தை போத்தல்களில் நிரப்பி கொண்டு செல்லப்படும் இவரது புதிய யோசனை நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் வைத்தியர் பெத்யூனின் சேவை சீன மக்களின் விடுதலைப் போராட்டத்துக்காக அர்ப்பணிக்கப்பட்டது.

சீனாவின் பிற்போக்குவாதியான சியாங்கே சேக் தலைமையில் இருந்த கோமிண்டாங் அரசினாலும், யப்பானிய ஆக்கிரமிப்பாளர்களினாலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராகப் பல முனைகளில் தொடுக்கப்பட்ட தாக்குதலைச் சமாளிப்பதற்காக மாஓ சேதுங் தலைமையில் உலக வரலாறே காணாத 5,000 மைல் நீண்ட பயணத்தை மேற்கொண்டு வட சீனாவில் இருந்த யெனான் என்ற இடத்தை அடைந்து அங்கு சீனக் கம்யூனிஸ்ட்டுகள் 10 ஆண்டு காலம் தளம் அமைந்திருந்த சந்தர்ப்பத்தில், சீன மக்களுக்கு உதவுவதற்காக கனடிய – அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிகளால் அனுப்பப்பட்ட நோர்மன் பெத்யூனும், வேறு இரு வெளிநாட்டவர்களும் 1938 மார்ச்சில் யெனானைச் சென்றடைந்தனர். பெத்யூன் அவர்கள் அங்கு இருந்த 20 மாத காலத்தில் மிகவும் வசதி குறைந்த கஸ்டமான சூழ்நிலைகளில் காயமடைந்த பல நூற்றுக்கணக்கான விடுதலைப் போராளிகளுக்கு யெனானில் இருந்த மலைக்குகை வைத்திய நிலையங்களில் ஏராளமான சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு அவர்களது உயிர்களைக் காப்பாற்றி அருந்தொண்டாற்றினார். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஒரு விடுதலைப் போராளிக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளும்போது பெத்யூனுக்கு நோய் தொற்று ஏற்பட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

அவர் மரணிப்பதற்கு சற்று முன்னர் தனக்குப் பொறுப்பாக இருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது மார்க்க இராணுவ ஜெனரல் Nie Rongzhen அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

அன்புடன் தளபதி நிய்,

"இன்று எனது நிலைமை உண்மையில் மோசமாக இருப்பதை உணர்கிறேன். பெரும்பாலும் என்றென்றைக்குமாக உங்களுக்குப் பிரியாவிடை கூறுகின்றேன். தயவு செய்து கனடிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் Tim Buck அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பிவிடவும். முகவரி: No.10, Wellinton Street, Toronto, Canada. அத்துடன் அதன் பிரதிகளை சீனாவுக்கான சர்வதேச உதவிக் குழுவுக்கும் (Committee on International Aid to China), கனடிய ஜனநாயகக் கூட்டமைப்புக்கும் (Democratic Alliance of Canada) அனுப்பி வைக்கவும். நான் இங்கு மிகவும் சந்தோசமாக இருப்பதாக அவர்களுக்குச் சொல்லவும். தயவுசெய்து எனது Kodak Retina II புகைப்படக் கருவியை தோழர் Sha Fei அவர்களிடம் ஒப்படைத்து விடவும்.

Norman Bethune, 04.20 P.M. November 11th, 1939.

பெத்யூன் சீனாவில் தங்கியிருந்த காலத்தில் ஒரேயொருமுறை தலைவர் மாஓ சேதுங்கைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பைப் பெற்றார். அந்தச் சந்திப்புச் சம்பந்தமாகவும், பெதூனின் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வு குறித்தும் மாஓ அவர்கள் பெதூன் மரணித்த நேரத்தில் "நோர்மன் பெத்யூன் நினைவாக" என்ற புகழ்பெற்ற கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டார். அந்தக் கட்டுரையில் மாஓ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"தோழர் நோர்மன் பெதூன் கனடிய – அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிகளால் சீனாவுக்கு அனுப்பப்பட்ட நேரத்தில் அவர் ஏறக்குறைய 50 வயதை அடைந்திருந்தார். யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான எமது தற்காப்புப் போரில் உதவுவதற்காக அவர் பல ஆயிரம் மைல்களைக் கடந்து வந்தார். அவர் அவ்வாறு பயணம் செய்து கடந்த வசந்த காலத்தின் போது யெனானை வந்தடைந்தார். பின் எங்களுக்கு உதவுவதற்காக வூட்டே மலையைச் (Wutai Mountain) சென்றடைந்தார். அவ்வாறு அவர் எங்களுக்கு உதவும் போது ஒரு தியாகியாக மரணமடைந்தார்.

இதுவே சர்வதேசியத்தின் உணர்வாகும். அதேவேளை இதுவே கம்யூனிசத்தின் உணர்வுமாகும். இந்த உணர்விலிருந்து ஒவ்வொரு சீனக் கம்யூனிஸ்ட்டும் கற்றுக் கொள்ள வேண்டும்."

நோர்மன் பெத்யூன் அவர்கள் சீன மக்களின் விடுதலை இலட்சியத்துக்கு அளித்த பங்களிப்பை சீன அரசும் மக்களும் என்றென்றும் நினைவு கூர்ந்து வருகின்றனர். அவரது நினைவாக சீனாவில் மருத்துவப் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அவருக்கு சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன் வைத்தியத்துறையில் மகத்தான பங்களிப்புச் செய்பவர்களைக் கௌரவித்து நோர்மன் பெதூன் பதக்கங்களும் (Norman Bethune Medal) வழங்கப்பட்டு வருகின்றன.

கனடிய அரசாங்கமும் நோர்மன் பெதூனைக் கௌரவித்து பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1973இல் கனடாவில் பெதூன் பிறந்த வீட்டை கனடிய அரசு சுவீகரித்து அதை அருங்காட்சியகமாக (Bethune Memorial House) மாற்றியுள்ளது. இந்த அருங்காட்சியகத்துக்கு வருடாவருடம் சராசரியாக 15,000 சீனமக்கள் உட்பட பல நாட்டவர்களும் விஜயம் செய்கின்றனர். அத்துடன் அவரது பெயரை 'தேசிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நபர்' (Person of National Historic

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி 1 இலட்சத்து 76 ஆயிரத்து 288 வாக்குகளால் வீழ்ச்சி!

**2018** பெப்ருவரி 10இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமக்கு ஏற்பட்ட தோல்வியை மறைக்க தமிழரசுக் கட்சித் தலைவர்களான ஆர்.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் போன்றோர் 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத கதை'யாகப் பல கதைகளைச் சொல்லி திரிகின்றனர். ஆனால் புள்ளிவிபரங்கள் அவர்களது மீசைகளில் மண்ணை மட்டுமல்ல சேற்றையே அள்ளி அப்பி வைத்திருக்கிறது என்பதுதான் உண்மை. இதோ புள்ளி விபரங்கள் உண்மையைப் பேசுகின்றன.

2015இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்ற மொத்த வாக்குகள் 5 இலட்சத்து 15 ஆயிரத்து 963. ஆனால் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு பெற்ற மொத்த வாக்குகள் 3 இலட்சத்து 39 ஆயிரத்து 675. இதன்படி 1 இலட்சத்து 76 ஆயிரத்து 288 வாக்குகளை கூட்டமைப்பு இழந்துள்ளது தெரிய வருகிறது.

2015 பொதுத்தேர்தலில் 16 ஆயிரத்து 196 வாக்குகள் மட்டும் பெற்ற தமிழ் காங்கிரஸ் கட்சி, இந்த உள்ளூராட்சித் தேர்தலில் 85 ஆயிரத்து 237 வாக்குகள் பெற்றுள்ளது. அதன் காரணமாக அது தனது வாக்கு வங்கியை 69 ஆயிரத்து 41 வாக்குகளால் அதிகரித்துக் கொண்டுள்ளது.

அதேநேரத்தில் 2015 பொதுத் தேர்தலில் மொத்தமாக 33 ஆயிரத்து 481 வாக்குகளைப் பெற்ற ஈ.பி.டி.பி. கட்சி, உள்ளூராட்சித் தேர்தலில் மொத்தமாக 75 ஆயிரத்து 93 வாக்குகளைப் பெற்றுள்ளது. இதன்படி ஈ.பி.டி.பி. தனது வாக்கு வங்கியை 41 ஆயிரத்து 612 வாக்குகளால் அதிகரித்துள்ளது.

இந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி வி.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டு அமைத்துப் போட்டியிட்ட சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி 67 ஆயிரத்து 591 வாக்குகள் பெற்றுள்ளது.

அதேபோல மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனியாக 61 ஆயிரத்து 71 வாக்குகள் பெற்றுள்ளது.

**புனிதன்**

தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரை 2015 பொதுத் தேர்தலில் வட மாகாணத்தில் 59 ஆயிரத்து 538 வாக்குகள் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, உள்ளூராட்சித் தேர்தலில் 68 ஆயிரத்து 35 வாக்குகள் பெற்று தனது வாக்குவங்கியை 8 ஆயிரத்து 498 வாக்குகளால் அதிகரித்துள்ளது.

2015 பொதுத்தேர்தலில் வட மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டு 38 ஆயிரத்து 274 வாக்குகள் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி, உள்ளூராட்சித் தேர்தலில் வட மாகாணத்தில் கட்சியின் பெயரில் போட்டியிட்டு 52 ஆயிரத்து 596 வாக்குகள் பெற்று, தனது வாக்கு வங்கியை 14 ஆயிரத்து 322 வாக்குகளால் அதிகரித்துக் கொண்டுள்ளது.

இந்தத் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சார்ந்திருக்கும் சிறீலங்கா பொதுஜன பெரமுன 16 ஆயிரத்து 394 வாக்குகள் பெற்றிருக்கிறது.

இவை தவிர பல சிறிய கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் வடக்கு கிழக்கில் பல ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றன.

வட மாகாணத்தை தனியே எடுத்துக் கொண்டால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனியாக 2 இலட்சத்து 341 வாக்குகள் பெற்றுள்ள அதேவேளையில், ஈ.பி.டி.பி., தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐ.தே.க., சிறீல.சு.க., சிறீ.பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் சேர்ந்து 3 இலட்சத்து 17 ஆயிரத்து 981 வாக்குகளைப் பெற்றதன் மூலம், தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட அவை மொத்தமாக 1 இலட்சத்து 17 ஆயிரத்து 640 வாக்குகள் அதிகமாகப் பெற்றுள்ளன.

இனி வருங்காலங்களில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் ஒரே அணியாகத்

தேர்தல்களில் களமிறங்கினால், தமிழரசுக் கட்சியை இருந்த சுவடே தெரியாமல் அகற்ற முடியும் என்ற உண்மை இந்தத் தேர்தல் முடிவின் மூலம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்த முடிவுகள் மூலம் தெரிய வருவது என்னவெனில், தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தமது தோல்வியை மறைக்க என்னதான் சப்புக்கட்டுக் கட்டினாலும், அவர்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாரதூரமான முறையில் செல்வாக்கை இழந்துள்ளார்கள் என்பதையே. இந்தத் தேர்தல் தெளிவாக்கும் விடயங்களை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்.

1976 முதல் முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, பின்னர் புலிகள், தற்பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரை தாங்கள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்லி வருவதை தமிழ் மக்கள் இந்தத் தேர்தல் மூலம் முற்றாக நிராகரித்துள்ளனர. அதேநேரத்தில் தமிழ் மக்கள் ஒற்றைப் பரிமாண அரசியலை விடுத்து பன்முகத்தன்மை வாய்ந்த பலகட்சி ஜனநாயக அரசியலையே விரும்புகின்றனர் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

வடக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தேசியரீதியான கட்சிகளுக்கு கணிசமாக வாக்களித்ததின் மூலம் வெறுமனே தமிழ் இனவாத அரசியலை மட்டும் அவர்கள் ஏற்றுக் கொண்டவர்களாக இல்லையென்பதையும் அவர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்கள் வாக்களித்திருக்கும் முறையை எடுத்து நோக்கினால், தமிழ் தேசியவாதிகள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுக்கு மட்டும் உரிய பிரதேசம் என்றும், அதனால் அந்த இரண்டு மாகாணங்களையும் இணைத்து தமிழர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் காலம்காலமாக கூறிவரும் கருத்து வலுவிழந்து போகின்றது. குறிப்பாக பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மட்டக்களப்பில் பெற்றுள்ள கணிசமான வாக்குகள் அங்குள்ள தமிழ் மக்களே வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பவில்லை என்பதற்கான அத்தாட்சியாகும்.

எனவே இனிமேலும் பிற்போக்கு தமிழ் தேசியவாதம் பேசி தமிழ் மக்களை தேசிய வாழ்விலிருந்து பிரித்து வைப்பதைத் தமிழ் தேசியவாதிகள் கைவிட வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு வழியில் நாட்டின் பெரும்பான்மையான சிங்கள, முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களுடன் இணைந்து தேசிய அரசியலில் ஈடுபடும் பாதையை இனிவரும் காலங்களில் வடக்கு கிழக்கின் தமிழ் தலைமைகள் கைக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யத் தவறும் பட்சத்தில் மக்களின் தற்போதைய எதிர்ப்போக்கு மேலும் வளர்ச்சி அடையும் என்பது உறுதி.

---

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

Significance) என கனடிய அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள லண்டன் நகரில் நோர்மன் பெத்யூனின் பெயரில் Canadian Medical Hall of Fame என்ற நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. கனடாவின் மொன்றியல் நகரிலும் நோர்மன் பெத்யூனை நினைவு கூர்ந்து ஒரு பொது சதுக்கத்துக்கு அவரது பெயர இடப்பட்டுள்ளதுடன் அங்கு அவரது சிலையும் நிறுவப்பட்டுள்ளது. இவை தவிர கனடாவின் யோர்க் பல்கலைக்கழக கல்லூரிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதேபோல ஸ்காபரோ நகரில் உயர்தரப் பாடசாலை ஒன்றுக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. ரொறன்ரோ நகரிலுள்ள பிரசித்தி பெற்ற சென் மைக்கேல் வைத்தியசாலையில் அவரது நினைவாக நோயாளர் விடுதி ஒன்றும் உள்ளது.

1990இல் நோர்மன் பெத்யூனின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கனடாவும் சீனாவும் ஞாபகார்த்த அஞ்சல் தலைகளை வெளியிட்டு அவரைக் கௌரவித்தன.

ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தின் போது அவர் செய்த பங்களிப்புக்காக அங்கும் அவர் நினைவாக பல நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நோர்மன் பெத்யூன் சம்பந்தமாக கனடாவிலும் சீனாவிலும் பல ஆவணத் திரைப்படங்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் அவர் சம்பந்தமாக பல இசை நிகழ்ச்சிகள், நாடகங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் பெதூன் சம்பந்தமாக பல நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

அவருக்கு உலக மக்களால் இவ்வளவு சிறப்புகளும் வழங்கப்படுவதற்குக் காரணம், முதலாவதாக அவர் ஒரு மிகப்பெரும் மனிதாபிமானியாக இருந்தமையாகும். இரண்டாவது காரணம் அவர் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருந்ததின் மூலம் ஒரு சர்வதேசியத்துவவாதியாகத் திகழ்ந்தமையாகும்.

மனிதகுலம் இருக்கும் வரை வைத்தியர் நோர்மன் பெத்யூன் அவர்களின் நாமம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

---

“பலமுடையவர்கள் என்று புகழப்படும் பிற்போக்குவாதிகள் அனைவரும் காகிதப்புலிகளே என்று நான் கூறினேன், காரணம் அவர்கள் மக்களிடமிருந்து பிரிந்துவர்கள். பாருங்கள்! ஹிட்லர் ஒரு காகிதப்புலி இல்லையா? ஹிட்லர் தூக்கியெறியப்படவில்லையா? ரசியாவின் ஜார் ஒரு காகிதப்புலி, சீனாவின் சக்கரவர்த்தி ஒரு காகிதப்புலி, ஜப்பான் ஏகாதிபத்தியம் ஒரு காகிதப்புலி என்றும் நான் கூறினேன். பாருங்கள்! அவர்கள் எல்லோரும் தூக்கியெறியப்பட்டுவிட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்னும் தூக்கியெறியப்படவில்லை. அதனிடம் அணுகுண்டும் இருக்கிறது. அதுகூட தூக்கியெறியப்படும் என்று நான் நம்புகிறேன். அதுவும் ஒரு காகிதப்புலியே.”

**-மா சேது ங்**

(கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மாஸ்கோ மாநாட்டு உரை – 18 நவம்பர் 1957)

# ஒரு வாசகரின் முகநூல் கேள்வியும் அதற்கான பதிலும்

**‘வானவில்’** வாசகர்களில் ஒருவரான ஜானகி பின்வரும் கேள்வியை எமது பத்திரிகைக்கு அனுப்பி வைத்துள்ளார். அவருக்கு எமது நன்றி. அவரது கேள்வியையும் அதற்கு ‘வானவில்’ சார்பான பதிலையும் கீழே தந்துள்ளோம்.

**கேள்வி இதுதான்:**
“ஒரு இளம் தலைமுறை நண்பரின் கேள்வி முகநூல் பதிவொன்றில். வானவில் பதிலளிக்குமா?

*1949 ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது இலங்கை அரசாங்கத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம் அமைச்சராக இருந்தாரா? தொழில்துறை அமைச்சராக இருக்கிறாரா?*

*சுதந்திரம் ஆங்கிலேயரிடம் இருந்து கிடைக்கும் போது தந்தை செல்வநாயகம் அவர்கள் தமிழர்கள் சிங்களவர்கள் 50:50 வீதம் தரச்சொல்லி கூறினாரா? அதனை ஜி.ஜி. அவர்கள் அரசுடன் இணைந்து தடுத்தாரா? அந்த நேரத்தில் உண்மையில் என்ன நடந்தது? ஜி.ஜி. அவர்கள் தடுக்காமல் விட்டு இருந்தால்ஆங்கிலேயர்கள் 50:50 தந்து இருப்பார்களா?*

*இவ்வளவு கால அழிவுக்கு ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் அந்த நேரத்தில் எடுத்த இந்த துரோகத்தனமான, பிழையான முடிவுதான் காரணம் என்ற வாதம் உண்மையில் சரியா?*

*உண்மையில் அந்த நேரத்தில் என்ன நடந்தது? தெரிந்தால் சொல்லுங்கள்.”*

**‘வானவில்’ சார்பான எமது பதில்:**
முதலாவதாக, கேள்வியில் இலங்கை 1949இல் சுதந்திரம் அடைந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தவறு. இலங்கை பிரித்தானியரிடமிருந்து 1948 பெப்ருவரி 04ஆம் திகதிதான் சுதந்திரம் பெற்றது.

இரண்டாவதாக, 50:50 என்ற கோரிக்கையை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் முன்வைக்கவில்லை. அதை ஜி.ஜி.பொன்னம்பலம் தான் முன்வைத்தார். இந்த நடைமுறைச் சாத்தியமற்ற தவறான கோரிக்கையை யார் முன்வைத்திருந்தாலும் பிரித்தானிய அரசாங்கமோ அதன் பின் சுதந்திர இலங்கையில் பதவிக்கு வந்த வேறு எந்த அரசாங்கமோ நிறைவேற்றியிருக்கப் போவதில்லை என்பதுதான் உண்மை. அத்துடன் மேலும் சில தகவல்கள்.

ஜி.ஜி.பொன்னம்பலம், செல்வநாயகம் போன்றோர் இணைந்து 1944 ஓகஸ்டில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கினர். 1947இல் நடைபெற்ற இலங்கையின் முதலாவது பொதுத் தேர்தலில் ஜி.ஜி.பொன்னம்பலம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

1947 பொதுத் தேர்தலில் டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்தது.

இந்தத் தேர்தலில் இந்திய வம்சாவழி தமிழ் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் செறிந்து வாழும் மலையகப் பகுதிகளில் இருந்த தொகுதிகளில் ஐ.தே.க.வுக்கு எதிரான இடதுசாரி சார்பான வேட்பாளர்கள் அமோக வெற்றியீட்டினர்.

இதனால் ஆத்திரமடைந்த டி.எஸ்.சேனநாயக்க, இந்திய வம்சாவழி மக்களின் பிரஜாவுரிமையை பறிப்பதன் மூலம் அவர்களை நாடற்றவர்கள் ஆக்கி அவர்களது வாக்களிக்கும் உரிமையைப் பறிக்க எண்ணி ‘பிரஜாவுரிமைச் சட்டம்’ என்ற பெயரில் ஒரு சட்டத்தை 1948இல் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி அதை வன்மையாக எதிர்த்தது. அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த பிரதமர் டி.எஸ்சேனநாயக்கவை “இனவாதி” என பொன்னம்பலம் வர்ணித்ததுடன், அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளை “கறுப்பு தினம்” எனவும் குறிப்பிட்டார்.

ஆனால் சில நாட்களிலேயே பொன்னம்பலம் அந்தர் பல்டி அடித்து, ஐ.தே.க. அரசாங்கத்தில் இணைந்து, கைத்தொழில்கள், கைத்தொழில் ஆராய்ச்சி மற்றும் மீன்பிடி அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார். அதன் மூலம் ஐ.தே.க. அரசு இந்திய வம்சாவழி மக்களின் பிராஜாவுரிமை, வாக்குரிமை என்பனவற்றைப் பறித்ததையும் ஏற்றுக் கொண்டார்.

பொன்னம்பலத்தின் இந்தத் துரோகம் காரணமாக, செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் ஆகியோர் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி 1949 டிசம்பரில் தமிழரசுக் கட்சியை உருவாக்கினர். தமிழரசுக் கட்சி இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தனது கொள்கையாக சமஸ்டிக் கொள்கையைப் பிரகடனம் செய்தது.

அதன் பின்னர் 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற ஒரே அமைப்பை உருவாக்கும் வரை சுமார் 27 வருடங்கள் இரு கட்சிகளும் பாம்பும் கீரியுமாகவே செயல்பட்டு வந்தன. இரண்டு கட்சிகளாக இயங்கினாலும் அவர்களுக்கிடையில் அடிப்படையான அரசியல் வித்தியாசம் எதுவும் இருக்கவில்லை. இரண்டு கட்சிகளும் யாழ்ப்பாண உயர்சாதி மேட்டுக்குழாமின் தமிழ் இனவாதப் பிரதிநிதிகளாகவும், பிற்போக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் உறவு கொண்டவர்களாகவும், ஏகாதிபத்திய சார்பானவர்களாகவுமே செயல்பட்டு வந்தனர் இன்றும் அவ்வாறே செயல்படுகின்றனர்.

இவர்களின் இந்த பிற்போக்கான போக்கு நீடிக்கும் வரை இவர்களால் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை என்றுமே தீரப்போவதில்லை.

**-‘வானவில்’ ஆசிரியர் குழு**

# 9 மணி நேரத்தில் ரயில் நிலையம் அமைத்து சீனாவில் அதிசய சாதனை!




சீனாவில் 9 மணி நேரத்தில் 1500 பணியாளர்கள் சேர்ந்து ஒரு ரயில் நிலையத்தையே கட்டி முடித்து, அதில் ரயிலையும் இயக்கிக் காட்டி உள்ளனர்.

தெற்கு சீனாவின் பூஜியன் மாநிலத்தில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று சீனாவின் சின்குவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 19-ம் தேதி இரவு ரயில் நிலையம் அமைக்கும் பணி தொடங்கி, 20-ம் தேதி காலையில் ரயில் நிலையத்தை நிர்மானித்து முடித்துவிட்டனர்.

லாங்காய் நகரில் அமைக்கப்பட்டுள்ள ரயில் நிலையம், கான்லாங் ரயில்வே, கான்ரூலாங் ரயில்வே, ஹாங்லாங் ரயில்வே ஆகிய மிகப்பெரிய சந்திப்புகளை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ரெயில் நிலையத்தில் போக்குவரத்து சிக்னல்கள், போக்குவரத்தைக் கண்காணிக்கும் அமைப்புகள் ஆகியவற்றையும் அமைத்துள்ளனர்.

9 மணி நேரத்தில் அமைக்கப்பட்ட இந்த ரயில் நிலையம் என்பது, தென்கிழக்கு சீனா மற்றும் மத்திய சீனாவை இணைக்கும் முக்கிய வழித்தடமாக கருதப்படுகிறது.

இந்த கடினமான இலக்கை அடைந்தது குறித்து சீனா டைசீஜு பொறியியல் குழுமத்தின் துணை மேலாளர் ஹான் டோசாங் கூறுகையில், “1500 பணியாளர்களின் வேகமான உழைப்புதான் முக்கியக் காரணம். 1500 ஊழியர்களையும் 7 பிரிவுகளாகப் பிரித்து பணியாற்றினோம்.

இந்தப் பணிக்காக 7 ரயில்கள், 23 குழிதோண்டும் ராட்சத இயந்திரங்கள் இதில் பயன்படுத்தப்பட்டன. 19-ம் தேதி இரவு தொடங்கிய பணிகள் 20-ம் தேதி காலையில் முடிந்தது. ஏறக்குறைய 9 மணி நேரத்தில் லாங்காய் நகரில் ரயில் நிலையத்தை அமைத்துவிட்டோம். அதில் சோதனை முயற்சி ரயிலையும் இயக்கிவிட்டோம்.

தென்கிழக்கு சீனா மற்றும் மத்திய சீனாவை இணைக்கும் முக்கிய வழித்தடமாக 246 கி.மீ தொலைவுக்கு ரயில் பாதை அமைக்கப்பட்டுவருகிறது. அதில் ஒருபகுதியாக இந்த ரயில் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது” எனத் தெரிவித்தார்.

# தோழர் இ.திருஞானமூர்த்தி (ஈ.ரி. மூர்த்தி) காலமானார்!

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், “ஈ.ரி.மூர்த்தி” எனத் தோழர்களால் அன்புடன் அழைக்கப்பட்டவருமான தோழர் இ.திருஞானமூர்த்தி கொழும்பில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2017 நொவம்பர் 18ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றன.

தமது இளமைக் காலத்தை மலாயாவில் (மலேசியா) கழித்த தோழர் மூர்த்தி, இலங்கை திரும்பியதும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து வேலை செய்ய ஆரம்பித்தார். பின்னர் ஒரு கட்டத்தில் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நவீன திரிபுவாதத்திற்கும் மார்க்சிச லெனினிசத்திற்கும் இடையிலான சிந்தாந்தப் போராட்டம் நடைபெற்று, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் பிளவுபட்ட போது, இலங்கையில் புரட்சிகர அணியுடன் தோழர் மூர்த்தி தன்னை இணைத்துக் கொண்டு, அந்தக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினராகத் தெரிவாகி, கட்சியின் முழுநேர ஊழியராகச் செயற்பட்டார்.

பின்னர் அங்கும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைமைதாங்கிய நா.சண்முகதாசன் இடது சந்தர்ப்பவாத கொள்கையை முன்தள்ளிய போது, அதற்கெதிராகப் போரடிய கட்சியின் பெரும்பான்மையான மார்க்சிச லெனினிச அணியினருடன் தோழர் மூர்த்தி தன்னை இணைத்துக் கொண்டதுடன், அதன் விளைவாக 1972இல் உருவான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) மத்திய குழு உறுப்பினராகவும் தெரிவானார். அத்துடன் அக்கட்சியின் தலைமையில் மலையகத்தில் செயல்பட்ட இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் பொருளாளராகவும் சிறப்பாகச் செயலாற்றினார்.

தமது வாழ்வின் பெரும்பகுதியை கம்யூனிஸ்ட் இலட்சியத்துக்காக அர்ப்பணித்த தோழர் மூர்த்தி அவர்களின் மறைவுக்கு ‘வானவில்’ தனது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**‘வானவில்’ ஆசிரிய குழு**

# சிரியா- இழந்துவரும் இளம் விழுதுகள்!

**சொ**ந்த வீடுகளில் இருந்து பல மைல் தூரத்தில் அகதிகளாக சனத்திரள் நிரம்பி வழியும் பெய்ரூட் முகாமில் வாழும் சிறார்கள் எதிர்காலம் பற்றிய கனவுகளை சிதைத்து விட்டு வெறுமனே தமது குடும்பங்களின் உயிர் நிலவுகைக்காக வேலைத்தளங்களில் வாடி வதங்கும் நிலைமை சொல்லொணா துயரில் எம்மை ஆழ்த்துகிறது. சிரிய அகதி சிறார்களில் பாதிக்கும் சற்றுக் குறைவான எண்ணிக்கையானோரே கடந்த வருடம் லெபனான் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 50 வீதமானோர் தமது ஒன்பதாவது வயதிலும் மிகுதியினர் பத்தாவது வயதிலும் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்டு விடுவர் என எதிர்பார்க்கப்படுவதாக ஐ.நா. அறிக்கை தெரிவிக்கின்றது.

அகதி முகாமிலிருந்து பாடசாலைக்கான போக்குவரத்துச் செலவைக் கூட சமாளிக்க முடியாமல் திண்டாடும் பெற்றோர் மத்தியில் சிறார்களின் எதிர்காலக் கனவு குதிரைக் கொம்பாகவே உள்ளது. மேலும் லெபனான் நாட்டின் பாடத்திட்டங்களில் சில பிரெஞ்ச் மற்றும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படுவதும் சிரிய அகதி சிறார்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு சவாலாகும். அகதி சிறார்கள் ஏனைய உள்நாட்டு பாடசாலை மாணவர்களின் கிண்டல், கேலிக்கு உள்ளாவதும் சிலவேளை துஷ்பிரயோகப்படுத்தப்படுவதும் பெற்றோர் கருத்திற்கொண்டு வருந்தும் மிக முக்கிய தடைக்கல்லாக விளங்குகிறது. இவ்வாறான காரணிகளைக் கருத்திற்கொண்டே ஆண் சிறார்களை சொற்ப ஊதியத்திற்கு வேலைக்கமர்த்தி பெண் சிறார்களை வீட்டில் தம்முடன் வைத்துக் கொள்ள பெற்றோர் தலைப்படுகின்றனர்.
சிரியா இழந்து வரும் ஆயிரக்கணக்கான இளம் தலைமுறையினரில் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் எனும் விதமாக ஓடே, முஹம்மத் மற்றும் சதாம் ஆகிய மூவரின் தற்போதைய வாழ்வோட்டத்தைச் சற்று அலசுவோம்.
ஓடே (சிரிய அகதி சிறுவன்) பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அகதி சிறார்களுக்கான பிரத்தியேக பாடசாலையில் சிறார்கள் ஆங்கில நெடுங்கணக்கினை மனதில் பதிய வைத்துக் கொண்டிருக்கும் தருணம் பதின்ம வயதுச் சிறுவன் திடீரென எழுந்து அறிவிப்பொன்றைச் செய்கின்றான்.
“இனிமேல் நான் பாடசாலைக்கு வரப்போவதில்லை.... வேலைக்குச் செல்லப் போகிறேன்'' என்பதாக இருந்தது அவனது அறிவிப்பு.

லெபனானின் உள்நாட்டு பாடசாலைக்கு தகுதி காணும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக அகதிகள் பாடசாலையில் பயிலும் 12 வயது நிரம்பிய ஓடே எனும் சிறுவனின் இந்த அறிவிப்பின் பின்னணி என்னவாகத்தான் இருக்க முடியும்? குடும்பத்தின் வறுமையைத் தவிர.....

அலெப்போ நகரை விட்டு அகதிகளாக வெளியேறி சுமார் ஒரு வருடமாகியிருக்கும் நிலையில் ஓடேவின் ஐந்து உடன்பிறப்புக்களுடனும் வயது முதிர்ந்த பாட்டியும் பெற்றோரும் என ஒட்டுமொத்த குடும்பமும் சின்னஞ்சிறு கூரையின் கீழே அகதியாக வாழ்வெனும் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படும் சருகாக காலத்தைக் கடத்துகின்றனர்.

“எனது தந்தை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்.... இன்சுலின் இன்றி வாழ்ந்துவிட முடியாத நிலை.... எனது வயது முதிர்ந்த பாட்டியோ உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளார்.... முள்ளந்தண்டு முறிந்து சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் உயர் கண்காணிப்பு வேண்டி நிற்கின்றார்... இவர்களைக் கவனிக்க அதிக பணம் தேவைப்படுகின்றது....'' ஓடே எனும் பதின்ம வயது சிறுவன் உதிர்க்கும் பக்குவப்பட்ட வார்த்தைகள் இவை. “நான் வேலைக்குச் செல்ல வேண்டும்.... நான் மட்டுமன்றி எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வேலைக்குச் சென்றால் மாத்திரமே பசிப்பிணி களைய வாய்ப்புண்டு.... குடும்பத்தின் அன்றாட தேவைக்காக நானும் கடனை மீள செலுத்தவென எனது தந்தையும் சம்பாதிக்க வேண்டும்.....''

ஒரு வருடத்திற்கும் மேலாக செலுத்தி முடிக்கப்படாத வீட்டு வாடகை, இதர கடன்கள் என பொறுப்புக்கள் இமயமாய் அவர்கள் முன்னே நிற்க பதின்ம வயது சிறுவன் ஓடே ஓடியாடி சம்பாதித்துக் கொண்டுவரும் சொற்ப ஊதியம் 6 டொலர்கள் அற்பமாய் கரைந்து போகையில் என்னதான் செய்திட முடியும், இயலாமையில் கையைப் பிசைவதைத் தவிர.

இறைச்சிக் கடைகள், பலசரக்குக் கடைகள், தேநீர் கடைகள் என நிரம்பி வழியும் ஷட்டிலா நகரில் சிறார்கள் தரை துடைக்கவும் பொருட்கள் ஏற்றி இறக்கவும் பாத்திரங்கள் கழுவவும் என சொற்ப ஊதியத்திற்கு இலகுவாக வேலை தேடிக் கொள்கின்றனர். நாளொன்றுக்கு 12 மணிநேரம் ஷட்டிலா நகர சந்தையொன்றில் உழைத்து களைக்கும் இச்சிறுவன் ஓடே கண்களில் தெரிவதென்னவோ கல்விச் சொப்பனமே!
“நான் எதிர்காலத்தில் என்னவாக வர வேண்டும் என எனக்கே தெரியவில்லை.... அதற்கு முன்னே இறந்து விடுவேனோ? நான் வளர்ந்த பிறகுதான் என்னவாக வேண்டும் என்பதை தீர்மானிப்பேன்...'' சிறுவனின் கள்ளங்கபடம் இல்லாப் பேச்சு நெஞ்சை உருக்குகிறது.

குடும்பத்தின் வறுமை நிலையினையும் கணவரின் உடல்நலமின்மையையும் கருத்திற்கொண்டே சிறுவனின் எதிர்காலத்தை அடகு வைத்துள்ளதாக ஓடேவின் தாயார் கண்ணீர் ததும்பக் கூறுகின்றார். “குடும்ப நிலை கருதி ஓடே மட்டுமல்ல எனது இளைய மகன்கள் (வயது 7, 10) இருவரும் கூட கல்வியைக் கைவிட்டு வேலைக்கு செல்கின்றனர்... உடல்நலமின்மை காரணமாக எனது கணவரால் தொடர்ச்சியான வேலையொன்றில் இருக்க முடியவில்லை... கைக்குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருப்பதால் என்னாலும் வேலைக்கு செல்ல இயலவில்லை.....'' அவரது கண்கள் இயல்பாகவே கண்ணீரை ஏந்தி நிற்கத் தயாராகின்றன. “லெபனானில் அகதி வாழ்க்கை வாழ்வதென்பது கொடுமைதான்..... இருப்பினும் சிரியாவில் யுத்த களத்தில் இரத்தம் சிந்துவதைக் காட்டிலும் பரவாயில்லை...''
சிரியாவில் தமது இருப்பிடம் முற்று முழுதாக அழிக்கப்பட்டு விட்டதாகவும் இறந்த கால வாழ்வினை மறந்து விட எத்தனிப்பதாகவும் ஓடேவின் தாயார் வெறுமையான பார்வையுடன் கூறினார்.

“ஒன்றுக்கும் பயப்பட தேவையில்லை..... வீட்டு வாடகை, கடன்களை செலுத்தி முடிக்க வேண்டும்...'' என்பதுவே சிறுவன் ஓடேவின் பொறுப்பாக இருந்தது.

சதாம் (சிரிய அகதி சிறுவன்): “நான் வளர்ந்ததும் பலசரக்குக் கடை முதலாளியாக வேண்டும்....'' சிரியாவை விட்டு அகதியாக வெளியேறி நான்கு வருடங்களாக பலசரக்கு கடையொன்றில் பணிபுரியும் மழைக்கும் பாடசாலைக்கு ஒதுங்கிடாத சிறுவனின் கனவு இதுவாக இருப்பதில் ஆச்சரியமில்லைதான்.

**மூலம்: அல்-ஜஸீரா**
**தமிழில்- ஹஸன் இக்பால்**

அடுத்த இதழில் தொடரும்....

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உருவாகியதின் பின்னணி

இலங்கையின் வட பகுதியில் நிலவி வரும் மிகக் கொடூரமானதும், அநாகரிகமானதுமான சாதி அமைப்புக்கும் தீண்டாமைக்கும் எதிரான ‘1966 ஒக்ரோபர் 21 எழுச்சி’ ஏற்பட்டு அரை நூற்றாண்டு கடந்துவிட்டது. இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு சம்பந்தமாக ஊடகங்களில் சிலர் சமீப காலங்களில் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு எழுதியது நல்ல விடயமே எனினும் அந்தக் கட்டுரைகளில் பல தவறுகளும், தகவல் பிழைகளும் இருந்த காரணத்தால் நான் இந்தக் கட்டுரையை எழுதத் தீர்மானித்தேன். அவ்வாறு நான் எழுதத் துணிந்ததிற்குக் காரணம், 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியிலும் அதன் பின்னர் தீண்டாமைக்கு எதிராக நடைபெற்ற அனைத்துப் போராட்டங்களிலும் நானும் நேரடியாகப் பங்குபற்றி இருந்தேன் என்ற உரிமை காரணமாகவே.

## மணியம்

இந்த வரலாற்றுப் போராட்டம் சம்பந்தமாக சிலர் எழுதிய கட்டுரைகளில் தவறுகள் ஏற்பட்டதிற்குக் காரணம், அந்த எழுத்தாளர்களில் பெரும்பாலோர் இந்தப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றி இருக்காததுடன், அதுபற்றி சரியாகப் படித்திருக்கவும் இல்லை என்பதும், அந்தக் காலகட்டத்தில் அவர்களில் சிலர் சிறுவர்களாக இருந்தமையும் ஆகும். எனவே நான் நேரடியாகப் பங்குபற்றியதுடன் கண்டு கேட்டவற்றையும் தெரியப்படுத்துவது காலத்தின் தேவை எனக் கருதுகிறேன்.

**போராட்டம் உருவாகியதின் பின்புலம்**

1965இல் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்காததால், டட்லி சேனநாயக்க தலைமையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி தன்னுடன் இன்னும் ஆறு கட்சிகளைச் சேர்த்து ஏழு கட்சிக் கூட்டரசாங்கம் ஒன்றை அமைத்தது. அந்த ஏழு கட்சிகளில் தீவிர சிங்கள இனவாதிகளான கே.எம்.பி. ராஜரத்ன மற்றும் ஆர்.ஜி.சேனநாயக்க ஆகியோரின் சிங்கள இனவாதக்



கட்சிகளும், தமிழ் இனவாதக் கட்சிகளான தமிழரசு மற்றும் தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் ஒருங்கே இடம் பெற்றிருந்தன.

தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெற்றதைத் தொடர்ந்து அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய யாழ். உயர்சாதி மேட்டுக்குழாம் பிரிவினர் புதிய உற்சாகத்துக்கு உள்ளாகினர். அவர்களது முதல் வேலையாக வடக்கில் வாழ்ந்த சனத்தொகையில் மூன்றிலொரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஆங்காங்கே தாக்குதல்கள் ஆரம்பமாகின.

தாழ்த்தப்பட்ட மக்கள் மீது இந்தத் தாக்குதல்கள் இரண்டு வகையில் நடந்தன. அவர்கள் குடியிருப்பதற்கும் தொழில் செய்வதற்கும் உயர் சாதியினரில் தங்கியிருந்தபடியால், சில இடங்களில் குடியிருந்த காணிகளில் இருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் ஜீவனோபாயத்திற்காக கள்ளுச் சீவிய உயர்சாதியினரின் பனை, தென்னை மரங்கள் வழங்காது மறுக்கப்பட்டன. பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் அவமரியாதைக்குள்ளாகினர். அவர்கள் நீர் தேவைக்குப் பயன்படுத்திய கிணறுகளில் மலம் கொட்டப்பட்டது. இவை தவிர, தமது மனித உரிமையை நிலைநாட்ட சாத்வீக முறையில் முற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஆங்காங்கே தாக்குதல்களும் நடாத்தப்பட்டன.

ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து அவர்களது வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த தமிழரசு ~ தமிழ் காங்கிரஸ் கட்சிகளோ, அவர்கள் அங்கம் வகித்த ஐ.தே.க. அரசாங்கமோ, அவர்களது சொற்படி செயற்பட்ட பொலிசாரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான், தாழ்த்தப்பட்ட மக்களின் சில அமைப்புகள் அச்சுவேலியில் நல்லதம்பி என்ற தாழ்த்தப்பட்டவர் ஒருவருக்குச் சொந்தமாக இருந்த சினிமா கொட்டகை ஒன்றில் இந்தப் பிரச்சினை பற்றி ஆராய்வதற்கு மாநாடு ஒன்றைக் கூட்டின.

இந்த மாநாட்டில் பல கட்சிகளும் அமைப்புகளும் கலந்து கொண்டன. இதில் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என்று ஊடகங்களால் அழைக்கப்பட்ட எமது புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் கலந்து கொண்டது. மாநாட்டில் விவாதங்களுக்குப் பின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் அரசாங்கம் நிறைவேற்றியுள்ள சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தக் கோருவதெனவும், தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட எந்தவொரு அரசியல் கட்சியோ, வெகுஜன அமைப்புகளோ அந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் எந்த முயற்சியிலும் ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மட்டும்

அந்தத் தீர்மானங்களை உளப்பூர்வமாக நடைமுறைப்படுத்தும் முடிவை எடுத்தது.

அதன் முதல்படியாக, வட பகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையில் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தை விளக்கி மத்திய செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் நா.சண்முகதாசன், டி.என்.நதுங்கே, ஏ.ஜெயசூரிய ஆகியோர் ஒப்பமிட்ட, "தீண்டாமை ஒழிக" என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை கட்சி 1966 செப்ரெம்பரில் வெளியிட்டது. மத்திய குழுவுக்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்றதில் அன்றைய கட்சி மத்திய குழுவில் வட பிரதேசம் சார்பாக அங்கம் வகித்த தோழர்கள் மு.கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி ஆகியோர் முக்கிய பங்கு வகித்திருந்தனர்.

இரண்டாவது கட்டமாக, "சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற தொனிப்பொருளில் வடக்கில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்துவது என்றும், அதன் முடிவில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்துவது எனவும் கட்சி முடிவு செய்தது. அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை சுன்னாகத்தில் இருந்து ஆரம்பிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

**சுன்னாகம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணம்**

நான் உட்பட இன்னும் சில மாணவத் தோழர்கள் அப்பொழுது சுன்னாகம் நகருக்கு அருகில் கந்தரோடை கிராமத்தில் அமைந்திருந்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தோம்.

சுன்னாகம் ஏற்கெனவே இடதுசாரிகளின் செல்வாக்குமிக்க பிரதேசமாக இருந்து வந்தது. சுன்னாகம் பட்டினசபையின் தலைவராக இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் மூதவை (செனட்) பொ.நாகலிங்கம் நீண்டகாலம் பதவி வகிக்கும் அளவுக்கு அப்பிரதேசத்தில் இடதுசாரிகளுக்குச் செல்வாக்கு இருந்தது. அதேநேரத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபராக யாழ்ப்பாண வாலிபர் - மாணவர் காங்கிரசின் தலைவர்களில் ஒருவரும், இடதுசாரிகளின் ஆதரவாளரும், மாணவர்கள் - ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவருமான பிரபலமிக்க ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் பணி புரிந்தார். அத்துடன் கம்யூனிஸ்ட் கட்சியின் "பிரச்சாரப் பீரங்கிகள்" என வர்ணிக்கப்பட்ட வி.பொன்னம்பலம், மாதகல் வ.கந்தசாமி மற்றும் விஜயரத்தினம், குருசேவ் கிருஸ்ணமூர்த்தி உட்பட பல முற்போக்கு ஆசிரியர்களும் அங்கு கல்வி கற்பித்தனர். இதுவும் சுன்னாகம் பிரதேசத்தில் இடதுசாரிக் கருத்துக்கள் பரவ ஒரு அடித்தளமாக இருந்தது.

இந்தப் பகைப்புலத்தில் புரட்சிகர உணர்வுகளால் தூண்டப்பட்ட நாம், நாமாகவே புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அக்கட்சியின் தலைமையிலான வாலிப முன்னணி ஒன்றைக் கந்தரோடையில் 1964இல் அமைத்திருந்தோம். அந்த வாலிப முன்னணி உறுப்பினர்களுக்கு கட்சியின் வட பிரதேச தலைவர்களான மு.கார்திகேசன், வி.ஏ.கந்தசாமி போன்றோர் சில மார்க்சிச அரசியல் வகுப்புகளையும், கே.ஜனகா மாஸ்ரர் சுமார் 100 வரையிலான அரசியல் வகுப்புகளையும் எடுத்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் எமத வாலிபர் சங்கம் சுன்னாகம் பகுதியில் இருந்த வேறு சில வெகுஜன அமைப்புகளையும் சேர்த்துக் கொண்டு வெகுஜனப் போராட்டம் ஒன்றில் ஈடுபடத் தீர்மானித்தது. அந்தப் போராட்டம் என்னவென்றால் -

அப்பொழுது சுன்னாகம் பட்டினசபைக்கு கீழ் இருந்த வட பகுதியின் முக்கியமான சந்தைகளில் ஒன்றான சுன்னாகம் பொதுச்சந்தை தனியார் குத்தகை முறையின் கீழ் இருந்தது. சந்தையின் உண்மையான குத்தகைக்காரர் சுன்னாகம் பகுதியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தவரும், சண்டியரும், தனியார் பஸ் கொம்பனி முதலாளியும், சட்டத்தரணியுமான ஐயக்கோன் என்பவர். அவர் தனது பினாமி ஒருவரின் பெயரில் சந்தைக் குத்தகையைப் பெற்று, பின்னர் சந்தையின் பல்வேறு பகுதிகளை தனது சிறிய பினாமிகளுக்குப் பிரித்துக் கொடுத்து குத்தகை வசூலித்து வந்தார். அவர்கள் வைப்பதுதான் குத்தகைக் கட்டணம், அவர்கள் வைப்பதுதான் சட்டம், என்ற நிலை நிலவியது. அவர்களது தன்னிச்சையான நடவடிக்கைகளில் பட்டினசபையோ, வேறு எவருமோ தலையிட முடியாது. இதனால் சுன்னாகம் சந்தையைப் பயன்படுத்தி வந்த பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்தனர்.

எனவே, "குத்தகை முறை கொள்ளை முறை, கொள்ளை முறைக்கு கல்லறை" என்ற கோசத்துடன் நாம் இந்த தனியார் குத்தகை முறைக்கு முடிவுகட்டும் போராட்டம் ஒன்றைத் தொடுக்கத் தீர்மானித்தோம். ஐயக்கோனின் கையாட்கள் எம்மைச் சுடுவது உட்பட பல பயமுறுத்தல்களை விடுத்த போதும் நாம் எதற்கும் அஞ்சாது எமது குறிக்கோளில் உறுதியாக இருந்து போராட்டத்தை முன்னெடுத்தோம். முதலில் எமது நோக்கம் சம்பந்தமாக சுவரொட்டி பிரச்சாரத்தைச் செய்துவிட்டு, பட்டினசபை மாதாந்தக் கூட்டம் நடந்த நாளொன்றில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைத் திரட்டிக் கொண்டுபோய் பட்டினசபைக் காரியாலயத்தைச் சுற்றிவளைத்து சந்தையை பட்டினசபை பொறுப்பெடுத்து நேரடியாக வரி வசூல் செய்ய வேண்டும் என பட்டினசபை நிர்வாகத்தை வலியுறுத்தி இணங்க வைத்து அதில் பெரும் வெற்றியும் பெற்றோம். இதன் காரணமாக எமக்கு சுன்னாகம் பிரதேச மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைத்ததுடன், பதின்ம வயதில் இருந்த மாணவர்களான எமக்குப் பெரும் உற்சாகமும் எமக்கு ஏற்பட்டது. (மாணவப் பருவத்தில் ஏற்பட்ட இந்த முதல் போராட்ட வெற்றியே என்னை இன்றுவரை இந்தப் பாதையில் உறுதியுடன் பயணிக்கத் தூண்டுகோலாக அமைந்துள்ளது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பெருமையுடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்)

எமது நடவடிக்கை காரணமாக சுன்னாகம் பகுதியில் எமது கட்சிக்கு ஏற்பட்ட செல்வாக்கு கட்சி வட பகுதித் தலைமையையும் ஈர்த்தது. அதுவும் ஒரு முக்கிய காரணியாக இருந்ததின் காரணமாகவே கட்சித் தலைமை 1966 ஒக்ரோபர் 21 தீண்டாமைக்கு எதிரான ஊர்வலத்தை சுன்னாகத்தில் இருந்து ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்து. (இந்த முடிவை எடுப்பதில் அப்பொழுது


கட்சியின் வட பிரதேசச் செயலாளராக இருந்த தோழர் வி.ஏ.கந்தசாமி முக்கிய பங்கை வகித்திருந்தார்)

**1966 ஒக்ரோபர் 21 எழுச்சி தினம்**

இந்த இடத்தில் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துவது அவசியம். இந்த எழுச்சி பற்றி கட்டுரைகள் எழுதிய சிலர், இந்த ஊர்வலத்தை தோழர் எஸ்.ரி.என்.நாகரத்தினம் தலைவராக இருந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தான் தலைமைதாங்கி நடாத்தியதாக தவறான வரலாற்றுத் தகவலைத் தந்துள்ளனர். உண்மை அதுவல்ல. இந்த ஊர்வலம் நடைபெற்ற பொழுது தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உருவாகி இருக்கவில்லை. அதுமட்டுமின்றி தோழர் எஸ்.ரி.என்.நாகரத்தினம் அந்த ஊர்வலத்தில் பங்குபற்றி இருக்கவுமில்லை.

ஊர்வலத்தை எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிராந்தியக் குழுவே ஒழுங்கு செய்திருந்தது. ஊர்வலத் தயாரிப்புகளை களத்தில் செய்து கொண்டிருந்த சுன்னாகம் கட்சிக்கிளை நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டது. அப்பொழுது நாம் தோழர் எஸ்.ரி.என்.நாகரத்தினத்திடமும் நிதி கேட்டுச் சென்றோம். அவர் அப்பொழுது மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்தார். வழமையாக நாம் வாரந்தோறும் எமது கட்சியின் 'தொழிலாளி' என்ற வார இதழை அவருக்குக் கொடுக்கச் செல்லும்போது, அவர் பதிலுக்கு தான் விநியோகிக்கும் அவர் சார்ந்த கட்சியின் வாரப்பத்திரிகையான 'தேசாபிமானி'யையும், சோவியத் தூதரக வெளியிடான 'சோவியத் நாடு' சஞ்சிகையையும் பிரதியுபகாரமாக எமக்குத் தருவது வழமை. இந்த உறவு காரணமாக நாம் நிதி சேகரிக்கச் சென்ற சமயம் அவர் மனமுவந்து 100 ரூபா பணத்தை (அன்றைய 100 ரூபா இன்று பல ஆயிரங்களுக்குச் சமம்) தந்ததுடன், "தம்பியவை இந்தப் போராட்டத்தை நீங்கள் உறுதியாகத் தொடர்ந்து நடத்தினால் நானும் உங்களுடன் நிச்சயம் சேருவேன்" எனவும் தெம்பூட்டினார். (ஆனால் அவருக்குச் சொந்தமாக சுன்னாகத்தில் இருந்த புடவைககடைக்கு முன்னால் இருந்து நாம் ஆரம்பித்த அன்றைய ஊர்வலத்தில் அவர் பங்குபற்றவில்லை)

இந்த ஊர்வலத்தை நடாத்துவதற்கு சுன்னாகம் பொலிசாரிடம் அனுமதி கோரியிருந்தோம். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. (தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் ஆட்சியின் பங்காளர்களாக இருக்கையில் அனுமதி மறுக்கப்பட்டது ஆச்சரியகரமான விடயமல்ல) எம்மை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த சிங்களவரான நிலையப் பொறுப்பதிகாரி (அவரது பெயர் விஜயதிலக என்று ஞாபகம்), அனுமதி வழங்க மறுத்தது தனது தனிப்பட்ட முடிவல்லவென்றும், அது மேலிடத்து உத்தரவென்றும் விளக்கிச் சொன்னதுடன், இந்தப் பிரச்சினையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தனது அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார். அத்துடன் அவர் இன்னொரு முக்கிய விடயத்தையும் எம்மிடம் சுட்டிக்காட்டினார்.



அதாவது தடையை மீறி ஊர்வலத்தை நடாத்த முற்பட்டால் ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் உட்பட கடும் நடவடிக்கைகளை எடுக்கும்படி தாம் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அதை அவர் சற்று நகைச்சுவையாகவும் பாரதூரமாகவும் இவ்வாறு கூறினார்:

"நீங்கள் சட்டத்தை மீறி ஊர்வலம் நடத்தினால் இன்னொரு கந்தசாமி தினம் கொண்டாட வேண்டி வரும்".

இதன் அர்த்தம் என்னவென்றால், பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 1947 பொது வேலைநிறுத்தத்தின் போது பொலிசார் சூட்டதில் கந்தசாமி என்ற தமிழ் எழுதுவினைஞர் ஒருவர் கொல்லப்பட்டது போல், சட்டத்தை மீறி இந்த ஊர்வலமும் நடாத்தப்பட்டால் இன்னொரு கந்தசாமி கொல்லப்படுவார் என்பதாகும். அவர் இங்கு குறிப்பிட்ட கந்தசாமி வேறு யாருமல்ல. எமது கட்சியின் வட பிரதேசச் செயலாளர் தோழர் வி.ஏ.கந்தசாமி அவர்களையே.

அத்துடன் இத்தகைய ஒரு சூழலில் தான் செயற்படுவதற்கு தனது மனச்சாட்சி இடம் கொடுக்காததினால் தான் ஒரு கிழமை விடுப்பில் செல்ல உள்ளதாகவும் எம்மிடம் அவர் கூறினார்.

இத்தகைய மனித நேயம் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பற்றிப் பின்னர் நாம் அறிந்து கொண்ட தகவலின்படி, அவர் 1965இல் நடந்த பொதுத் தேர்தலின் போது தனது சொந்தத் தொகுதியான அத்தனகல தொகுதியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறீமாவோ பண்டாநாயக்கவுக்கு ஆதரவாக வேலை செய்ததால், ஐ.தே.க. அரசின் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகி அங்கிருந்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு இடம் மாற்றப்பட்டவர் என்று அறிந்து கொண்டோம்.

அந்தச் சிங்களப் பொலிஸ் அதிகாரி விடுப்பில் சென்ற பின்னர், அங்கு உதவி பொலிஸ் அதிகாரியாக இருந்த இராசையா என்பவர் பொறுப்பை எடுத்துக் கொண்டார். அவர் மிகவும் உயர்சாதி வெறி பிடித்த ஒரு அதிகாரி. அவர் எம்மை அடக்குவதில் மிகவும் மூர்க்கமாக இருந்தார். அவரின் நடவடிக்கைக்கு முதல் பலியானது நானும் இன்னொரு தோழரும்தான்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்ற மாணவத் தோழர்களில் நான் மற்றும் நா.யோகேந்திரநாதன், அ.கௌரிகாந்தான் ஆகிய மூவரும் படிப்பை இடைநிறுத்திவிட்டு எமது கட்சியின் முழுநேர ஊழியர்களாகச் செயற்பட ஆரம்பித்திருந்தோம். நான் கிளிநொச்சியிலும், கௌரிகாந்தன் வவுனியாவிலும், யோகேந்திரநாதன் சுன்னாகத்திலும் கட்சி வேலைகளில் ஈடுபட்டிருந்தோம்.


1966 ஒக்ரோபர் 21 ஊர்வலத்தை ஏற்பாடு செய்வதற்காக சுன்னாகம் வந்த நானும் தோழர் கௌரிகாந்தனும் தோழர் யோகேந்திரநாதனுடன்

சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் இருந்த கட்சிக் காரியாலயத்தில் தங்கி இருந்தோம். அப்படித் தங்கியிருக்கையில் சில பொலிசாருடன் அங்கு வந்த உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி இராசையா என்னையும் தோழர் யோகேந்திரநாதனையும் (நித்திரையில் இருந்த தோழர் கௌரிகாந்தனை அவர்கள் கவனிக்கவில்லை) கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று அன்றிரவு முழுவதும் பலவிதமான துன்புறுத்தல்களைச் செய்துவிட்டு அதிகாலையிலேயே விடுதலை செய்தனர்.

பொலிசார் இவ்வாறு எம்முடன் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்ட போதிலும் திட்டமிட்டபடி ஒக்ரோபர் 21ஆம் திகதி ஊர்வலத்தை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்து வந்தோம். ஊர்வலத்தின் அன்று எமது கட்சியின் அப்போதைய செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான நா.சண்முகதாசன் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்று மீண்டுமொருமுறை ஊர்வலத்துக்கு அனுமதி கேட்டுப் பார்த்தார். ஆனால் பொலிசார் அனுமதி மறுத்துவிட்டனர். அதன் பின்னர் ஊர்வலத்தை தடையை மீறி நடத்தும்படி கூறிவிட்டு அவர் தான் தங்கியிருந்த யாழ் நகரிலுள்ள வாடி வீட்டுக்குச் சென்றுவிட்டார். ஊர்வலத்தில் பங்குபற்றவில்லை.

**பொலிசாரின் காட்டுமிராண்டித்தனம்**

ஊர்வலம் பிற்பகல் இரண்டு மணி அளவில் ஆரம்பமனது. ஊர்வலத்தின் முன் வரிசையில் தோழர்கள் வி.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், கே.டானியல், மு.முத்தையா, இ.கா.சூடாமணி, எமது கட்சியின் தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் டி.டி.பெரேரா ஆகியோர் தலைமைதாங்கிச் செல்ல, பின்னால் நாம் நூற்றுக்கணக்கில் அணிவகுத்துச் சென்றோம். ஊர்வலம் காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை அண்மித்த போது திடீரென அங்கு தோன்றிய உதவிப் பொறுப்பதிகாரி இராசையா தலைமையிலான பொலிசார் துப்பாக்கி முனைகளாலும், தடிகளாலும் ஊர்வலத்தினர் மீது மூர்க்கத்தனமாகத் தாக்கத் தொடங்கினர். பொலிசார்



தாக்கத் தொடங்கியதும் நாம் கலைந்து செல்லாது அவ்விடத்திலேயே வீதியில் அமர்ந்து கொண்டோம். (இந்த ஊர்வலத்தின் படம் ஒன்று பெருப்பிக்கப்பட்டு, சட்டகம் போடப்பட்டு எமது கட்சி அலுவலகத்தில் நீண்டகாலம் தொங்கவிடப்பட்டிருந்தது. ஆனால் 1995 ஒக்ரோபர் 30ஆம் திகதி வலிகாமம் மக்களை புலிகள் பலவந்தமாக வெளியேற்றியபோது அது தவறிப்போய்விட்டது)

இதனால் செய்வதறியாது திகைத்த பொலிசார் மேலிடத்துடன் தொடர்பு கொண்ட பின்னர் தோழர் வி.ஏ.கந்தசாமி உட்படச் சிலரைக் கைது செய்துவிட்டு மற்றவர்களை கோசங்கள் எதுவும் எழுப்பாது இரண்டு இரண்டு பேராகச் செல்லுமாறு பணித்தனர். பொலிசார் அப்படிச் சொன்னாலும் நாம் யாழ்நகர் வரை வாய்களைக் கறுப்புத் துணிகளால் கட்டிக் கொண்டு ஊர்வலமாக அணிவகுத்துச் சென்று யாழ் முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டத்தையும் வெற்றிகரமாக நடாத்தி முடித்தோம். (ஊர்வலத்தில் பங்குபற்றாத சண்முகதாசன் பொதுக் கூட்டத்தில் வீராவேசமான உரை ஒன்றை நிகழ்த்திவிட்டு கொழும்பு திரும்பினார்)

இந்தச் சம்பவத்தின் பின்னர் யாழ் குடாநாடு முழுவதும் சாதி அமைப்புக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் பெரும் தீச்சுவாலையாக கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அதன் பின்னரே போராட்டத்தை பரந்துபட்ட அளவில் வெகுஜனப் போராட்டமாக முன்னெடுப்பதற்காக கட்சி ‘தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்’ என்ற பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கியது. இந்த ஊர்வலத்தின் பின்னரே தோழர் எஸ்.ரீ.என். நாகரத்தினம் எம்முடன் வந்து இணைந்து கொண்டார். அவரது அர்ப்பணிப்பான சேவை காரணமாக பின்னர் நாம் அவரை வெகுஜன இயக்கத்தின் தலைவராகத் தெரிவு செய்தோம்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் 1968இல் தனது முதலாவது மாநாட்டை யாழ்ப்பாண மாநகர சபை மண்டபத்தில் வெற்றிகரமாக நடாத்தியது. இந்த மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் மட்டுமின்றி, நல்லெண்ணம் படைத்த உயர்சாதிச் சமூகத்தினரும், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சிங்கள, முஸ்லீம் முற்போக்கு சக்திகளும் கலந்து கொண்டனர்.

பின்னைய நாட்களில் தீண்டாமைக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்து, வட பகுதியில் இருந்த பெரும்பாலான கோவில்களும் தேநீர்க்கடைகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிடப்பட்டன. அந்தப் போராட்டங்களின் உச்சமாக மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசப் போராட்டம் அமைந்தது. அந்தப் போராட்டத்தின் வெற்றியுடன் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் முதல் கட்டம் முடிவுக்கு வந்தது எனலாம். (இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போராட்டம் சம்பந்தமாக பிறிதொரு கட்டுரையில்தான் விரிவாக ஆராய முடியும்)

அதன் பின்னர் நாட்டின் அரசியல் சூழ்நிலை மாறி தேசிய இனப் பிரச்சினையை இனவாத சக்திகள் தலையாய பிரச்சினையாக முன்னுக்குக் கொண்டு வந்தனர். இதன் காரணமாகவும் வேறு சில பிரச்சினைகள் காரணமாகவும் கட்சிக்குள் இடது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டைப் பின்பற்றிய சண்முகதாசன் அணியினருக்கும் எம்மைப் போன்ற மார்க்சிச லெனினிசவாதிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு அது முற்றி கட்சி பிளவு கண்டது. இந்தச் சூழ்நிலையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் செயற்பாடற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன் பின்னரான வரலாறு இனவாத யுத்த வரலாறாக மாற்றமடைந்துவிட்டது.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

தடங்கல்களும் உள்ளன என்பது இன்னும் மிகத் தெளிவாகத் தெரிய வரும். எனவே பல மாதங்கள் இழுத்தடிக்கப்பட்டு, பெரும் தொகை பணச் செலவில் நடாத்தப்பட்ட இந்தத் தேர்தலின் மூலம் மக்களுக்கு ஏதாவது பயனுள்ள விடயங்கள் நடைபெறுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க, இந்தத் தேர்தலின் மூலம் உள்ளூராட்சி சபைகளில் மட்டுமின்றி நாட்டை நிரவகிக்கும் மத்திய அரசாங்கத்திலேயே அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரமற்ற நிலைமை உருவாகியுள்ளது. இந்த நிலைமை உள்ளூராட்சி தேர்தல் நடந்து முடிந்த பின்னர் திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. அது இந்த அரசாங்கம் உருவான நாளிலிருந்து உருவாகி வந்த ஒன்று.

தற்போது பதவியில் உள்ள "நல்லாட்சி" அரசாங்கம் என்று சொல்லப்படும் இந்த அரசானது, வெளிநாட்டு சக்திகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது மூலோபாயத் தேவைகளுக்காக எதிரும் புதிருமான இரண்டு கட்சிகளைக் கொண்டு சதித்தனமான முறையில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அதனால்தான் இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டு மூன்று வருடங்களைக் கடந்துவிட்ட போதிலும், அதனால் நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ, நாட்டில் அரசியல் மற்றும் நிர்வாகத் திறனுள்ள ஒரு ஆட்சியை நடாத்தவோ முடியவில்லை.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெற வைப்பதில் 2015 ஜனவரி 08 தேர்தலின் போது ஐ.தே.கவும் சிறீ.ல.சு.கவின் ஒரு பகுதியும் கைகோர்த்தன. அதன் பின்னர் அதே ஆண்டு ஓகஸ்ட்டில் நடந்த பொதுத் தேர்தலின் போது ஜனாதிபதி மைத்திரி சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்து கொண்டே தனது கட்சிக்குத் துரோகம் இழைத்து ஐ.தே.கவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். அவரது போசகரான சந்திரிகவும் வெளிப்படையாக ஐ.தே.கவையே ஆதரித்தார்.

அதன் மூலம் உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசபக்த பிரிவினரான சிறீ.ல.சு.க. அணியினரை அழித்துவிடலாம் என மைத்திரியும், சந்திரிகவும் அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களும் கனவு கண்டனர். ஆனால் அவர்களது கனவு பகல் கனவாகப் போய்விட்டது.

இவர்களது கபடத்தனமான நடவடிக்கைகளால் உண்மையான சிறீ.ல.சு.கவினரைத் திசைதிருப்ப முடியாது போனதுடன், இவர்களுடன் நின்ற சுதந்திரக் கட்சி அணியினரதும், நாட்டு மக்களினதும் வெறுப்பையும் கூட சம்பாதித்துக் கொண்டனர். அதன் காரணமாக கூட்டு எதிரணியுடன் இணைந்து நின்ற சுதந்திரக் கட்சியினரை வளைத்துப் போட்டு உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மைத்திரி தந்திரம் வகுத்துச் செயல்பட்டார். அந்தத் தந்திரமும் பலிக்கவில்லை.

கடைசியில் ஐ.தே.கவுடனும் கூட்டுச்சேர முடியாமலும், கூட்டு எதிரணியின் ஆதரவு கிட்டாமலும் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு படுதோல்வி அடைந்து மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். தோல்வியின் தாற்பரியம் எப்படியென்றால், மைத்திரி தனது சொந்த ஊரான பொலநறுவ மாவட்டத்தையே மகிந்த அணியிடம் இழந்ததுடன், பண்டாரநாயக்கவினதும், அவரது மனைவி சிறீமாவோவினதும், அவர்களது மகள் சந்திரிகவினதும் பாரம்பரியமாக 50 வருடங்களுக்கும் மேலாக இருந்த வந்த அத்தனகல தொகுதியையே இந்தத் தேர்தலில் கூட்டு எதிரணியிடம் இழந்தனர்.

இருந்தும் மீண்டும் ஐ.தே.க. தனித்து அரசாங்கம் அமைப்பதற்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கே மைத்திரி முயன்றார். ஆனால் அவரது கட்சிக்குள் எழுந்த கடுமையான எதிர்ப்புக் காரணமாக இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்துவிட்டு, கூட்டு எதிரணியின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு (உள் மனதில் மனமின்றி) உடன்பட வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார். ஆனால் 19ஆவது திருத்தம், தனது அதிகாரங்களைத் தானே குறைத்துக் கொண்டமை போன்ற சுருக்குக் கயிறுகளைத் தனது கழுத்தில் தானே போட்டுக் கொண்டதால் அவரால் அதையும் செய்ய இயலவில்லை. இதைத்தான் 'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்று சொல்வது.

அதுவுமல்லாமல், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொறுப்பான பொதுச் செயலாளர் பதவியை பல ஆண்டுகளாக வகித்துவிட்டு, முதல்நாள் இரவு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடனும் அவரது சகாக்களுடனும் அலரி மாளிகையில் விருந்தில் கலந்து கொண்டு முட்டை அப்பம் சாப்பிட்டுவிட்டு, அடுத்த நாள் 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்து' எதிரணியின் பொது ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய மைத்திரியின் நேர்மையையிட்டு எந்தவொரு மனிதனும் சந்தேகிக்காமல் இருக்க முடியாது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் மைத்திரியை நம்பி கூட்டு எதிரணி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசை அமைப்பதற்கு உடன்படுவது 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதை'யாகவும் முடியலாம்.

இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் சகல தோல்விகளுக்கும், அதன் காரணமாக உள்ளூராட்சித் தேர்தலில் ஆட்சியின் இரு பங்காளிக் கட்சிகளும் தோல்வி கண்டதற்கும் இரு கட்சிகளுமே காரணம். இந்த நிலைமையில் இரண்டில் ஏதாவது ஒரு கட்சி மீண்டும் ஆட்சி அமைப்பதாலோ, பிரதமரையோ அல்லது மந்திரி சபையையோ மாற்றி அமைப்பதாலோ பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. அப்படிச் செய்வது தலைவலியைக் குணமாக்க தலையணையை மாற்றுவது போன்றது. தலையணியை மாற்றுவதால் தலைவலி மாறாது. தலைவலி உடம்புக்குள் உள்ளது. தலையணி வெளியே உள்ள பொருள். தலைவலியை மாற்றுவதானால் உடம்புக்குத்தான் உரிய வைத்தியம் செய்ய வேண்டும்.

அந்தத் தேவையைத்தான் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலம் மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள். மக்கள் 2015 ஜனவரியிலும், ஓகஸ்ட்டிலும் இந்த அரசாங்கத்துக்குக் கொடுத்த அங்கீகாரத்தை உள்ளூராட்சித் தேர்தல் மூலம் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். அவர்களது உரிமையையும் இறைமையையும் யாரும் மீற முடியாது. மக்கள் வழங்கிய 2018 பெப்ருவரி 10 புதிய தீர்ப்பின்படி, நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் ஒன்றை நடாத்துவதே அரசாங்கத்துக்கு முன்னால் உள்ள ஒரேயொரு தெரிவு.

மக்களின் அந்தத் தெரிவையே கூட்டு எதிரணியும், ஜனநாயகத்தில் பற்றுக்கொண்ட அனைவரும் ஏகோபித்த குரலில் வலியுறுத்த வேண்டும்.

# த.தே.கூட்டமைப்பும் ஜே.வி.பியும் இனியும் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது ஜனநாயக விரோதம்!

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றியீட்டியதின் மூலம் தற்போதைய அரசாங்கத்திற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது. அதுமாத்திரமல்லாமல் இந்த அரசாங்கத்திற்கு மறைமுகமாக முண்டு கொடுத்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. என்பனவற்றுக்கும் கூட சூடு கொடுத்துள்ளது.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் அரசாங்கத்தின் பங்காளிகள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தார். அதுமாத்திரமின்றி யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய மகிந்த, "சம்பந்தன் ரணில் விக்கிரமசிங்கவின் பொக்கற்றுக்குள் இருக்கிறார்" எனத் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தலைவர்கள் ஐ.தே.கவின் பொக்கற்றுக்குள் இருப்பதும், மடிக்குள் இருப்பதும் ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 முதல் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் மட்டுமின்றி, தமிழர்களுக்கென ஒரு தனிநாடு அமைக்க ஆயுதம் தாங்கிப் போராடிய வேலுப்பிள்ளை பிரபாகரனும் கூட ஐ.தே.கவின் பொக்கற்றுக்குள்ளே இருந்துதான் செயல்பட்டனர்.

தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளியாக இருந்து கொண்டுதான் நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சியாகவும் இருக்கின்றது. அதன் மூலம் எதிர்க்கட்சிக்குரிய வரப்பிரசாதங்களையும் சலுகைகளையும் அனுபவித்து வருகின்றது. நாடாளுமன்றத்தில் 54 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு எதிரணி சாதாரண அணியாக இருக்க 16 உறுப்பினர்களைக் கொண்ட (அதிலும் ஈ.பி.ஆர்எல்.எப். கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பிரிந்து சென்றுவிட்டார்) தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி அந்தஸ்துடன் இருக்கிறது. இது வேறு எந்த நாட்டிலும் இல்லாத வினோதம்.

தற்போதைய அரசாங்கமும் தனது ஆட்சியைப் பிரச்சினை எதுவுமின்றி கொண்டு நடாத்துவதற்காக இந்த பொம்மை எதிர்க்கட்சியை உருவாக்கி வைத்திருக்கிறது.

அதேபோல, வெறுமனே ஆறு உறுப்பினர்கள் மட்டுமே கொண்ட ஜே.வி.பி. நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி கொறடாவாகப் பதவி வகிக்கிறது.

ஜனநாயகத்தைப் பற்றி வாய் கிழியப் பேசும் இந்த இரு கட்சியினரும் வெட்கம் கெட்ட நிலையில் ஜனநாயகத்துக்கு விரோதமாக இவ்வாறு பதவி வகிப்பது தவறு என்பதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். சரி, இவ்வளவு நாளும்தான் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது உள்ளூராட்சித் தேர்தல் மூலம் அரசாங்கத்திற்கு மட்டுமின்றி, இந்த இரு கட்சிகளும்கும் எதிராகக்கூட மக்கள் தீர்ப்பு வழங்கிவிட்ட பின்னர், இவர்கள் இனிமேலும் பதவியில் ஒட்டிக் கொணடிருப்பது என்ன நியாயம்?

இந்த இரண்டு கட்சியினரும் உண்மையில் ஜனநாயகத்தை மதித்து நடப்பவர்களாக இருந்தால் உடனடியாகத் தமது பதவிகளைத துறக்க வேண்டும். அப்படியில்லாமல் தொடர்ந்தும் பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தால் அதைச் சர்வாதிகாரப் போக்கு என்றும், பதவி மோகம் என்றும்தான் சொல்ல வேண்டும்.

**-பி.வி.**


## *மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சினையும் - ஸ்டாலின்*

"ஒரு தேசம் தன் விதியைத் தானே சுதந்திரமாக தீர்மானித்துக் கொள்ள உரிமையுண்டு. தனக்குப் பொருந்தக்கூடிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அதற்கு உரிமையுண்டு. ஆனால் இவ்வாறு செய்வதற்கு மற்ற தேசிய இனங்களின் உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்க வேண்டும் என்பது ஒரு போதும் தேவையில்லை. இது சந்தேகத்திற்கிடமற்ற ஒன்று

ஒரு தேசிய இனமானது, தன்னுடைய பெரும்பான்மையினருடைய நலனை, அதற்கும் மேலாக பாட்டாளி வர்க்கத்தின் நலனை மனதில் கொண்டிருக்கும் பட்சத்தில் அது எவ்வாறு தன்னுடைய சொந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்? எதிர்காலத்தில் அதன் சட்ட அமைப்பு எந்த வடிவங்களில் இருக்கும்?

தன்னாட்சி அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒரு தேசிய இனத்திற்கு உரிமையுண்டு பிரிந்து செல்கின்ற உரிமையும் அதற்கு உண்டு. அதே நேரத்தில் எல்லாச் சூழ்நிலையிலும் இதைச் செய்யவேண்டும் என்று அர்த்தமல்ல. தன்னாட்சி அல்லது பிரிந்து செல்லுதல் என்பது எப்போதும், எல்லா இடத்திலும் ஒரு தேசிய இனத்தின் பெரும்பான்மையினருக்கு அதாவது உழைக்கும் மக்களுக்கு பயன்தருவதாய் இராது."

# ஜனாதிபதியும், பிரதமரும் உடனடியாக பதவி விலகவேண்டும்!



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிரீலங்கா பொதுஜன பெரமுன தெளிவான வெற்றியைப் பெற்றுள்ளதால், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகவேண்டுமென ஒன்றிணைந்த எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் ஏனைய அமைச்சர்களால் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், நாட்டை பிரிவுப்படுத்தும் அரசியலமைப்பைக் கொண்டு வந்தமை, உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற பிரச்சனைகளால் கடன்பட்டிருந்த மக்களின் கோபம் தேர்தல் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் அரசாங்கத்தை தோற்கடித்து எதிர்க்கட்சி ஒன்று வெற்றிப் பெற்ற சம்பவமானது வரலாற்றில் என்றுமே இடம்பெற்றதில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதியும், கூட்டு எதிரணியின் தலைமைத் தளகர்த்தருமான மகிந்த ராஜபக்ச, தற்போதைய அரசாங்கம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதால் அது உடனடியாகப் பதவி விலகி புதிதாக பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்த முன்வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

**'வானவில்' முதலிலேயே கோரியிருந்தது**

இந்த 'நல்லாட்சி' அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை உரிய நேரத்தில் நடாத்தாது இரண்டு வருடங்களுக்கும் மேலாக இழுத்தடித்து வந்த நேரத்தில் அதைக் கண்டித்த எமது 'வானவில்' பத்திரிகை, அதன் 2017 ஏப்ரல் இதிழில் "உள்ளூராட்சித் தேர்தல்களை உடன் நடத்துக" என்ற தலைப்பில் முன்பக்க தலைப்புக் கட்டுரை ஒன்றைத் தீட்டியிருந்தது.

அதுமாத்திரமல்லாது, தென்னிலங்கையில் நடைபெற்ற சில கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டு எதிரணியிடம் தோல்வி கண்டதைச் சுட்டிக் காட்டிய 'வானவில்', இந்தச் சூழ்நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற்றால் கூட்டு எதிரணியே அமோக வெற்றி பெறும் என்றும், மைத்திரி தலைமையிலான சிறீ.ல.சு.கட்சி மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்படும் என்றும் கூட்டிக் காட்டியிருந்தது. எமது கணிப்பு சரியென்பதை நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நிரூபித்துள்ளது.

அதுமாத்திரமல்லாமல், மைத்திரி – ரணில் தலைமையிலான அரசாங்கம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதால், "அரசாங்கம் பதவி விலக வேண்டும்" என்ற முன்பக்கத் தலைப்புக் கட்டுரை ஒன்றை 'வானவில்' 2016 ஒக்ரோபர் இதழில் வெளியிட்டிருந்தோம்.

இவையெல்லாவற்றுக்கும் மகுடம் வைப்பது போல, 2018 பெப்ருவரி 10இல் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாக வெளிவந்த 'வானவில்' 2018 ஜனவரி மாத இதழில் (இதற்கு முந்தைய இதழ்) "ஜனாதிபதி – பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும்" என முன்பக்க கட்டுரை ஒன்றைத் தீட்டியிருந்தோம். நாம் முன்வைத்த அந்தச் சரியானதும் தீர்க்கதரிசனம் மிக்கதுமான கருத்தையே, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடந்து முடிந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும், கூட்டு எதிரணியின் நாடாளமன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்த்தனவும் வலியுறுத்தியுள்ளனர்.

***எனவே, மக்கள் ஆதரவை இழந்துவிட்ட தற்போதைய அரசாங்கம், தார்மீகரீதியில் அதை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவி விலகி, புதிதாக பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தி மக்கள் தமக்கு விரும்பிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு வழி செய்ய வேண்டும் என 'வானவில்' மீண்டுமொருமுறை வலியுறுத்துகின்றது.***